இரண்டாவது இந்த ஐ.டி. ஆஸ்பத்திரி மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் கவனித்து வந்தாலும் நம்முடைய நல்வாழ்வுத் துறை இலாகாவும் அவ்வப்போது யோசனை சொல்லிக் கொண்டு வருகிறது. இப்போது அந்த மருத்துவமனையில் காலராவினால் அனுமதிக்கப்பட்ட ஒன்றிரண்டு ஆண்டுகளில் ஒரே ஒரு பேஷன்ட்தான் இறந்திருக்கிறார். இந்தப் புள்ளிவிவரங்களை நான் மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் பேசியதற்குப் பின்னர் கேட்டு அது வந்திருக்கின்றது. இருந்தாலும் அங்கே உடனடியாக வண்டியை அனுப்பி அந்த சிகிச்சையை செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இப்போது அந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஊசிபோட்டு நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரிகளில் பி.எஸ்.ஸி பட்டதாரிகளுக்கு ஒதுக்கீடு.

* வினா எண். 542—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக்கல்லூரிகள் பி. எஸ்ஸி. பட்டதாரிகளுக்காக 10 தவிகித இடத்தை மீண்டும் ஒதுக்குமாறு தமிழக அரசிற்கு மாணவர்களிடமிருந்து அண்மையில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இது பற்றி என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ): 1981–82 ஆம் ஆண்டிற்கான முதலாண்டு மருத்துவப் பட்டப் படிப்பிற்கு 97 இடங்கள் பி. எஸ்ஸி பட்டதாரிகளுக்காக ஒதுக்கப்பட்டு அவ்விடங்களுக்கு மாணவர்களும் சேர்க்கப்பட்டு விட்டனர்.

மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள்

* வினா எண். 543— திரு செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக்கல்லூரியில் 1980–1981ம் ஆண்டில் சேர்க்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர் தமிழர்கள்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ): 20 மாணவர்கள்.

1982 மார்ச் 18]

(முற்பகல் 9-50)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவக் கல்லூரியிலே வெளிநாட்டு மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்று இந்த மணியான யோசனை எப்போது உதயமானது. அதுமாதிரி இந்தியாவிலே வேறு மாநிலங்களிலே எங்கே சேர்த்துக் கொள்கிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 1972 ஆம் ஆண்டு. மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் தெரியாது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இருந்து மாணவர்கள் இங்கே சேர்க்கப்படுவது 20 பேர் என்று சொன்னார்கள். அவர்களைச் சேர்த்துக்கொள்ள என்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன? தமிழர்கள் பல வெளிநாடுகளில் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஒரு சிறு திருத்தம். 1972–ஆம் ஆண்டு என்று சொன்னேன். அது 1968 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வி கேட்டார்கள். அதற்கு, 1980 ஆம் ஆண்டு வரையிலே நேரடியாக வை. ஓ. சி. மார்க் இல்லாமலே தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஜட்ஜ்மெண்ட் வந்ததற்குப் பிறகு மற்ற மாணவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அதேமாதிரி வை.ஓ.சி. வைத்து, இன்டர்வியூ மார்க் போட்டு எடுக்கிறோம். தமிழ்நாடு ஆரிஜின் என்று அதிலே இருக்கிறது. யாராவது தெலுங்கு பேசி இருக்கக் கூடும். தமிழ்நாடு ஆரிஜின் என்று திட்டவட்டமாக சான்றிதழ் இருந்தால்தான் கொடுக்கப்படும். 1968 ஆம் ஆண்டிலே 9 இடங்கள் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு 22 இடங்களாக ஒதுக்கியிருக்கிறோம்.

திருவேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற வைத்தியக் கல்லூரிகளில் வெளிநாட்டில் இருக்கின்றவர்களை சேர்க்கவேண்டுமென்றும், அப்படி சேர்ப்பதற்கு கேபிடேஷன்ஃபீஸ் வாங்க வேண்டும் என்றும் ஒரு ஆலோசனையை மத்திய அரசு கூறி இருக்கிறதா? ஆம் எனில், நமது அரசு அளித்திருக்கிற விவரங்கள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் நமக்கு எழுதி இருக்கிறார்கள். மாண்புமிகு சங்கரானந்தம் அவர்கள் எழுதி இருக்

கிறார்கள். நாம் இன்னும் சில விவரங்கள் கேட்டு இருக்கிறோம். அவர்கள் தருகின்ற தொகை போதாது, இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். கடிதப்போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. Exchange of letters are going on. ஆகவே அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப் படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு அங்கே மருத்துவக் கல்லூரிகளிலே இடம் அளிப்பது மறுக்கப்படுகிறது. அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே, இலங்கை தமிழ் மாணவர்களுக்கு என்று சில இடங்களை நம்முடைய மருத்துவக் கல்லூரிகளில் ஒதுக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 22 இடங்களிலே கூட இலங்கை மாணவர்கள் கூட, தமிழ் ஆரிஜின் இருக்கக்கூடியவர்கள் அதில் சேர்க்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, சிலோன் ரீப்பாட்ரியேட்ஸ், நம்முடைய தமிழகத்தில் உள்ள சிலோன் ரீப்பாட்ரியேட்ஸ் ஆக இருக்கக்கூடியவர்களுக்கு தனியாக 5 இடங்கள் கொடுக்கப்படுகின்றன.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்த வெளி நாட்டு மாணவர்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படு கிறார்கள்? ஆண்டுதோறும் வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கை வேறுபடுகிறது. ஆகவே வெளிநாட்டு மாணவர்கள் எத்தனை சதவீதம் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படு கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, 1968-ல் 9 இடங்கள் கொடுக்கப்பட்டன; 1972-ல் 12 இடங்கள்; 1980-ல் 20 இடங்கள்; 1981-ல் பிஜி ஐலன்ட்ஸை சேர்ந்தவர்களுக்கு 22 இடங்கள் கொடுத்திருக்கிறோம்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளை விடும் திட்டம்

*வினா. எண் 544—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தூங்கும் வசதி கொண்ட பேருந்து (SLEEPER COACH) விடும் திட்டம் உள்ளதா?